**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 28.07.2026</u>**

**OS.224/2019**

**பி.வா.சா.2 திரு. சுபாஷ்**

**பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அரூர் டவுன்புறத்தே வாணியாறு ஓடுகிறது என்றால் சரிதான். நான் குடியிருப்பது அந்த வாணியாற்றுக்கு கிழக்கு பக்கம் அம்பேத்கர் நகர் என்றால் சரிதான். அரூர் பேருந்து நிலையம், சேலம் ரோடு எல்லாம் வாணியாற்றுக்கு மேற்கு பக்கம் என்றால் சரிதான். பிரதிவாதி கறிகடை வைத்திருக்கும் இடத்தில் இருந்து நான் குடியிருப்பது எவ்வளவு தூரம் என்றால் ஒரு பல்லாங்கு தூரம் இருக்கும். குன்னா என்கின்ற அன்வர்பாஷா எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் பாட்சாபேட்டையில் குடியிருந்து வருகிறார். மேற்படி குன்னா என்கின்ற அன்வர்பாஷாவிற்கு எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரு வீடுதான் உள்ளது. அரூர் பஸ்டாண்டில் இருந்து புதுசந்தைமேடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டர் தொலைவு இருக்கும். புதுசந்தைமேட்டில் குன்னா என்கின்ற அன்வர்பாஷாவிற்கு வீடு, கறிகடை உள்ளதா என்றால் இல்லை.

2. நான் எனது வாக்குமூலத்தில் தாவா சொத்து தெரியும் என்று சொல்லியுள்ளேன் தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்து கட்டிடமா அல்லது காலியிடமா என்றால்

கட்டிடம். அது நீளம் எவ்வளவு, அகலம் எவ்வளவு என்றால் அது எனக்கு தெரியாது. அந்த தாவா சொத்துக்கு நான்குபக்கம் யார் இருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் சேலம், தருமபுரி செல்கின்ற சாலை உள்ளது. குன்னா என்கின்ற அன்வர்பாஷா கசாப்கடை வைத்துள்ளது இரண்டடுக்கு மாடி கட்டிடம் என்றால் சரிதான். கசாப்கடை வைத்துள்ள கடையின் நீள, அகலம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கசாப்கடையில் தரைதளத்தில் இருந்து மேல் மாடிக்கு செல்வதற்கு தரைதளத்தில் செட்டர் போட்ட கதவு உள்ளது என்றால் சரிதான். அந்த கட்டிடத்திற்கு மின்இணைப்பு உள்ளது என்றால் சரிதான்.

3. கசாப்கடை பிரதிவாதியான குன்னா என்கின்ற அன்வர்பாஷாவிற்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும், அவருக்கு கிரையம் மூலம் பாத்தியம். அவர் யாரிடம் கிரயம் பெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. அவர் வாங்கிய சொத்தின் நீளம், அகலம்என்ன என்று தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கசாப்கடையின் வடக்கு, தெற்கு சுவர் முக்கால்அடி சுவர், அந்த சுவர் பூச்சினால் 10 அங்குலம் வரும் என்றால் சரிதான். குன்னா என்கின்ற அன்வர்பாஷா கசாப்கடை வைத்துள்ளதற்கு வடக்கு பக்கம் ஒரு பிரியாணி கடை உள்ளது என்றால் சரிதான். அந்த இடம் யாருடையது என்றால் சலீம்பாய் என்பவருடையது. அவர் குன்னா என்கின்ற அன்வர்பாஷாவிற்கு என்ன உறவுமுறை என்றால் அது எனக்கு தெரியவில்லை. சலீம்பாய் அந்த இடத்தை விலைக்கு வாங்கி

கட்டிடம் கட்டி பிரியாணி கடை வைத்துள்ளாரா என்றால் ஆமாம். எனக்கு தாவாசொத்து பற்றி எதுவும் தெரியாது, குன்னா என்கின்ற அன்வர்பாஷா எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை யார் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தது என்றால் குன்னா என்கின்ற அன்வர்பாஷா அழைத்து வந்தார்.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.28 17:40:10 +0530